# 11 தலயாத்திரை

நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் ஆன்மாக்களுக்கு, அருள்பாலிக்கும் பொருட்டு ஆலயங்களில் எழுந்தருளியுள்ளான். அதனால்தான் ஆலயங்களும் ஆலயச் சூழல்களும் புனிதமான இடங்களாகக் கருதப்படுகின்றன. அப்புனித இடங்களுக்குத் தலயாத்திரைகள் மேற்கொள்வதன் மூலம் இறை உணர்வும் இறை பக்தியும் ஏற்பட்டு இறுதியில் ஆன்மா விடுதலை அடைய முடியும் என்பது சைவர்களின் நம்பிக்கையாகும். வாழ்த்துவதற்கு வாயையும், நினைப்பதற்கு நெஞ்சையும், வணங்குவதற்குத் தலையையும் தந்த தலைவனாகிய இறைவனை இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் பூவும் நீருங்கொண்டு வணங்குதல் வேண்டும் எனக் கூறிய திருநாவுக்கரசு நாயனார், கால்களின் பயன் பற்றி,

**கால்களாற் பயன்என் -கறைக்**
**கண்டன் உறை கோயில்**
**கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்**
**கால்களாற் பயன் என்**

என்று தனது பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் ஆலய தரிசனச் சிறப்பினையும் வழிபாட்டின் முக்கியத்துவத்தினையும் உணரமுடிகிறது.

சங்க காலத்தில் வளமுடைய புரவலர்கள், வள்ளல்கள், மன்னர்கள் போன்றவர்களைப் புலவர்கள் நாடிச்சென்று அவர்களைப் போற்றிப் பாடிப் பரிசில் பெற்றனர். இதன் அடிப்படையிலேயே ஆற்றுப்படை நூல்கள் தோற்றம் பெற்றன. அவற்றில் **திருமுருகாற்றுப்படை** நூல் முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாகப் பாடப்பட்டுள்ளது. காலப்போக்கில் இறைவன் உறையும் தலங்களுக்குச் சென்று தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ளமுயன்றனர்.


இறையனுபூதி பெற்ற அருளாளர்கள் தலயாத்திரை சென்று பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். குறிப்பாக திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய சைவ சமய குரவர்கள் பாடி மகிழ்ந்த திருத்தலங்களைத் **திருமுறைத் திருத்தலங்கள்** என்றும் ஆழ்வார்கள் போற்றிப் பாடிய திருத்தலங்களை **மங்களாசனம்** செய்யப் பெற்ற திருத்தலங்கள் என்றும் கூறுவர். இவர்களால் பாடப் பெற்ற தோத்திரப்பாக்களும், பாசுரங்களும் திருக்கோயில்களை மையமாகக் கொண்டே எழுந்தன. பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் போன்ற பனுவல்களிற் கூறப்படும் திருத்தலங்களோடு புராண இதிகாச மாந்தர்கள் கொண்டுள்ள தொடர்பு பற்றிய செய்திகளுங்

காணப்படுகின்றன. பிரம்மா, விஷ்ணு, திருமகள், உமை முதலிய தெய்வங்களும், இந்திரன், பிரகஸ்பதி, சந்திரன் முதலிய தேவர்களும், இராமன், இலக்குவன், அர்ச்சுனன் முதலிய காப்பிய நாயகர்களும், யானை, சிலந்தி, குரங்கு, ஜடாயு முதலிய ஐந்தறிவு உயிரினங்களும் வழிபட்டதாகப் பல திருத்தலங்கள் குறிப்பிடப்படுகின்றன. வரலாற்றுத் தொன்மையும், ஆன்மீகச் சிறப்பும் பெற்ற இத்தகைய திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டால் பாவங்கள் நீங்கி புண்ணியங்கள் கிட்டும் என்பது சைவ மக்களின் நம்பிக்கையாகும்.

சைவ சமயத்தில் ஆன்மாக்கள் முத்திபெறக் காரணமான மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றின் வடிவாக சிவன் விளங்குகிறான். அவற்றை முறையோடு வழிபடுவோர் உண்மை ஞானம் பெற்று முத்தி அடைவர் என்பதனை,


**மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க் கோர்**
**வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!**

என்று தாயுமானவர் பாடுகின்றார். இவ்வகையில் பிறக்க முத்தி தருவது **திருவாரூர்த் தலம்** என்றும், இறக்க முத்தி தருவது **காசித் தலம்** என்றும், தரிசிக்க முத்தி தருவது **சிதம்பரத் தலம்** என்றும், நினைக்க முத்தி தருவது **திருவண்ணா மலைத் தலம்** என்றும் கூறப்படுகிறது. இந்நம்பிக்கை சைவ மக்களிடையே தலயாத்திரை செய்வதற்குக் காரணமாக அமைந்தது.



காசி

இந்தியாவில் காசி, இராமேஸ்வரம். சிதம்பரம், மதுரை போன்ற திருத்தலங்கள், முருகனின் ஆறு படைவீடுகள், இலங்கையில் கதிர்காமம் மற்றும் பாடல் பெற்ற திருத்தலங்கள் மட்டுமல்ல வெவ்வேறு பிரதேசங்களில் உள்ள ஆலயங்களுக்கும் நாம் தலயாத்திரை செய்து இறை அருளைப் பெறலாம்.



கங்கை நதி

தலயாத்திரை மேற்கொள்ளும் போது உடல், உளத் தூய்மையுடன் செல்ல வேண்டும். யாத்திரை செல்லும் காலத்தில் இறை சிந்தனையுடன் இறை நாமங்களைப் பாடிக்கொண்டு யாத்திரையை மேற்கொள்வது சிறந்தது. ஆலயங்களைச் சென்று தரிசிப்பதன் மூலம் ஆலய வரலாறுகள், தலத்தின் மகிமை, ஆலயச் சூழல் ஆகியவற்றையும், அங்கு காணப்படும் சிற்ப, ஓவியங்கள் கூறும் புராணக் கதைகளையும், கலை நுட்பங்களையும் அறிய முடிகின்றது. தலயாத்திரையானது தனிமனித வழிபாடாக மட்டுமன்றி அடியவர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதனால் சமூக ஒருமைப்பாடு,

# யாத்திரைத் தலங்கள்



அக்கினித் தீர்த்தமும் இராமேஸ்வர ஆலயமும்



சிதம்பர நடராஜர் ஆலயம்



மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம்



திருவாரூர் தியாகராஜ சுவாமிகள் ஆலயம்



திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயம்



கதிர்காமம்

சமய கலாசார உணர்வுகள் என்பன வளர்கின்றன. பல்வேறு தலங்களைத் தரிசிப்பதன் மூலம் இறை பக்தியும் மன அமைதியும் சாந்தியும் உருவாகின்றது. இறுதியில் ஆன்மா ஈடேற்றம் அடைய வழிவகுக்கிறது.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. திருமுறைத் தலங்கள் என அழைக்கப்படுபவை எத்தகைய தலங்களாகும்?
2. தலயாத்திரையை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்?
3. தலயாத்திரையை மேற்கொள்வதன் மூலம் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.

**செயற்பாடு**

01. உமது பாட ஆசிரியரின் உதவியுடன் தலயாத்திரை மேற்கொண்டு அங்கு நீர் பெற்ற அனுபவங்களை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

02. பல தலங்களுக்குத் தலயாத்திரை செய்யும் போது மேற்கொள்ள வேண்டிய முன் ஆயத்தங்களைப் பட்டியற் படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

**பாடச்சுருக்கம்.**

- இறைவன் அருள் பாலிக்கும் இடம் ஆலயம்.
- நாயன்மார்கள் தலயாத்திரை செய்து தலங்களைப் போற்றிப்பாடியுள்ளனர்.
- தலயாத்திரையில் முத்தித் தலங்கள், பாடல்பெற்ற தலங்கள், ஆறுபடைவீடுகள் முக்கிய இடம் பெறுகின்றன.
- தலயாத்திரையை இறை சிந்தனையுடன் மேற்கொள்ள வேண்டும்.
- தலயாத்திரை செய்வதன் மூலம் சமய, சமூக, கலை, பண்பாடு, கலாசாரம் என்பன வளர்கின்றன.
- தலயாத்திரையானது மனதிற்கு அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்துகின்றது.